# ✠ உலக வாழ்க்கை மாயைப் பற்றி

**யானே பொய்! என் நெஞ்சம் பொய்! என் அன்பும் பொய்!!!**

**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே!!!**

**யானே பொய் :**

எனது இந்த உடல் பொய் அழிந்து போகக் கூடியது. இந்த உடம்புக்கு போய் யார் மெய் என்று பெயர் வைத்தது?

**என் நெஞ்சம் பொய் :**

என் நெஞ்சில் வஞ்சம், பொய், பொறாமை, கோபம், லோபம், மூடம், மதம், ஆங்காரம் இன்னும் இதுபோன்ற எல்லா துர்குணங்களும் நிரம்பி வழிகிறது என் நெஞ்சும் பொய்தானே!

**என் அன்பும் பொய் :**

நான் என் தாய், என் மனைவி, என் பிள்ளைகள், என் சகோதர சகோதரிகள், என் உறவினர்கள், என் வீடு என்ற எண்ணம், என் சாமி, என் இறைவன் ஆக்கிக் கொண்டேன். இப்படி இருந்தால் என்னிடம் என்ன இருக்கும் ? பொய், பித்தலாட்டம், ஏமாற்றம்தான் மிஞ்சும். ஆக இதெல்லாம் பொய்யாய் இருக்க காரணம் அடியேன் முற்பிறவிகளில் செய்த வினைகள் தான். இதுவே வேதங்கள் கூறும் உண்மையாகும்.

## ✠ அழுதால் பெறலாம் அவன் அருளை எப்படி?

நாம் செய்த பாவத்தை நினைத்து அழு, இனியொரு பாவம் செய்யாதிரு! நீ யாருக்கும் கெடுதல் செய்யாதிரு ! உன் பெற்றோர் குறிப்பாக தாய் பத்து மாதம் உன்னை சுமந்து பட்ட துன்பத்தை பின் ஒவ்வொரு நாளும் வளர்க்கப்பட்ட துன்பத்தை நினைத்து அழு! உன் உயிருள்ளவரை மாதா பிதாவை வணங்கி போற்றி வாழ வைத்து வாழு! என் போன்று எல்லாவற்றையும் படைத்தானே யாரோ ஒருவன், யாரோ ஒருத்தி இல்லை ஏதோ ஒரு சக்தி அதை காண வேண்டுமென்று அழு! பைத்தியக்காரன் என்பார்கள். இந்த உலகை பொருட்படுத்தாதே! நீ மட்டும் அழு!

## ✠ மாய வாழ்க்கை

**வீடெடுத்து வேள்வி செய்து மெய்யினோடு**

**பொய்யுமாய் மாடு மக்கள் பெண்டிர்**

**சுற்றம் என்றிருக்கும் மாந்தர்கள்**

**நாடு பெற்ற நடுவர் கையில் ஓலை வந்து அழைத்திடில்**

**ஓடு பெற்ற காசியினை பெறாது காண் இவ்வுடலமே!**

**<u>இதன் விளக்கம் :</u>**

மெய்யாகிய வீட்டை அறியாது பொய்யான வாழ்வை நம்பி புது வீட்டைக் கட்டி வேள்விகள் செய்து புதுமனை புகுவிழா நடத்தி, மாடு, மக்கள், மனைவி, சொந்த பந்தம், என அனைவரோடும் எப்போதும் இப்படியே இருப்போம் என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களே! நல்லது, கெட்டது என்பதை நடுவாக இருந்து தீர்ப்பளிக்கும் இறைவனின் இறுதி ஓலை எமன் கையில் கிடைத்தது. இவ்வுயிரை கொண்டு போனால் மண்ணால் செய்த ஓடு பெரும் விலை கூட பெறாது என்பதும், ஒரு காசுக்கும் உதவாது என்பதும் இவ் உடம்பு வெறும் கூடுதான் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறார்கள்.